www.tamilarangam.net



# புலிகளின் பேச்சில் முரண்பாடும் பதட்டமும்

(தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மார்ச் 11ம் திகதி சன்டே (Sun day) எனும் இந்திய வார இதழ் ஒன்றுக்கு கொடுத்த பேட்டியில் அவரின் இன்றைய குழம்பிய நிலையையும் பதட்டத்தையும் காணமுடிகின்றது. சிந்தனை தெளிவில்லாமலும் இனி என்ன செய்வது எனத் தடுமாறும் போதும் வெளிவருவது பிதற்றல்களே.)

ஈழத்தமிழ் மக்களுக்கென ஒரு தமிழ் நாட்டினை வென்று எடுத்து தரப்போவதாகக் கங்கணம்கட்டி நிற்கும் ஒரு குழுவின் (விடுதலைப்புலிகள்) தலைவர் என்ற முறையில் பிரபாகரனின் பேட்டியைத் தனிப்பட்ட ஒருவரின் பேட்டி என அசட்டை செய்துவிட முடியாது. அவர் கொடுத்த பேட்டியை மக்கள் நன்கு வாசித்து சிந்தனைக்கொடுத்து விமர்சிப்பது கடமையாகின்றது.

முதலாவது கேள்விக்களித்த பதிலிலேயே, பிரபாகரனின் இன்றைய குழம்பிய நிலையைக் காணக்கூடியதாகின்றது. தொடர்ந்து எழுப்பப்பட்ட முக்கிய கேள்விகளுக்கெல்லாம் அவர் அளித்த பதில்கள் அவரின் கையாலாகாத்தனத்தையும் முன்னுக்கு பின் முரண்பட்ட சிந்தனைப் போக்கையும் நாம் உணரமுடிகின்றது.

சட்டவிரோதமாக்கப்படத் தகுந்த ஒரு விடுதலை இயக்கத்தை ஏன் தெரிந்தெடுத்தீர்கள் என்பதே நிருபர் அனித்தாப்பிரதாபின் முதற்கேள்வி.

ஈழத் தமிழ்மக்களின் அண்மைக்காலப் போராட்ட வரலாற்றினை அறிந்த எந்த ஒரு இளைஞனும் இதற்கு சுருக்கமான தத்துவார்த்த வரலாற்று ரீதியான பதிலைக் கொடுக்கமுடியும். ஆனால் பிரபாகரன் அவர்கள் என்ன கூறுகிறார்? தான் நினைத்தாராம் ஆயுதப் போராட்டம்தான் வழி என்றும் ஆகவேதான் இதனை தலைமறைவு (under ground) இயக்கமாக, ஆரம்பத்திலிருந்தே அமைத்தது என்பதே இவரால் கூறமுடிந்தது.

இரண்டாவது கேள்விக்கு அளித்த பதிலும் மிக விசித்திரமானது. "ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைப்பதற்கு தங்களை நிர்ப்பந்திக்கப்பட்ட தனிப்பட்ட அனுபவங்கள் ஏதும் உள்ளதா" என்பதே இரண்டாவது கேள்வி. இதற்கானபதில் :-1958ல் நடைபெற்ற அதிர்ச்சியூட்டும் இனக்கலவரம் என் மனதில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியது என்கிறார். 30 வயது இளைஞராகிய பிரபாகரன் 1958ல் இவரின் வயது ஐந்து!! ஆகா 4 வயதுக் குழந்தையிலேயே அரசியல் ஞானம் பெற்ற அபூர்வக்குழந்தை; விடுதலைக்கெனத் தோன்றிய தீர்க்கதரிசி, எனத் தன்னை ஒரு அவதார புருஷனாகவும் இதற்கென்றே இவ்வுலகில் தோன்றியவராகவும் காட்டிக் கொள்ள முனைகிறார். முதலிரண்டு கேள்விகளிலுமே வரலாறு மறுக்கப்படுகின்றது, மறைக்கப்படுகின்றது. மிகக் கொடூரமாக ஒடுக்கப்படும் மக்கள் மத்தியில் "இது ஏன்?" எனும் சிந்தனை வளருவதையும் உலக வரலாற்றுப் பின்னணியில் "இதற்கு வழி என்ன?" எனத் தேடும் போது ஒருங்கிணைந்த ஆயுதப் புரட்சியே எமது பாதை என வெகு சுருக்கமாக பதிலிக்க முடியாமல் பிரபாகரன் என்ற தனி ஒரு வீரனின் உணர்விலிருந்தே ஆயுதப்புரட்சி எனும் வழிமுறை தோன்றியது எனக்கூறி மக்களை ஏமாற்றுவதே இவரின் இலட்சியமாக உள்ளது.

"உமா மகேஸ்வரனுக்கும் தங்களுக்கும் எவ்வாறு பிளவு ஏற்பட்டது" —நிருபரின் இன்னுமொரு முக்கிய கேள்வி; இதற்கான பதில் :-"புலிகள் இயக்கத்துக்கும் உமாமகேஸ்வரன் எனும் தனிப்பட்ட நபருக்குமிடையேயான போராட்டம் இது. நான் இதற்குப் பொறுப்பல்ல; உமாமகேஸ்வரனே இப்பிரச்சினையை ஏற்படுத்தியது. எமது இயக்கத்தின் சட்டங்களை மீறிய படியால் அவர் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்." இத்துடன் பிரபாகரன் நின்று விடவில்லை. தொடர்ந்து "இயக்கத்தின் ஸ்தாபகன் என்ற வகையிலும், இயக்கத்தின் தலைவராக (Chairman) உமாமகேஸ்வரனை நியமித்தவன் என்ற வகையிலும் யான் அவரை விலக்க வேண்டியது தவிர்க்க முடியாதது." எனக்கூறி முடித்தார். கட்சியில் அவருடைய சர்வாதிகாரப் போக்கை காட்டுகின்ற வசனம் இது. எல்லாமே அவரே. கட்சியில் ஜனநாயகம் இல்லை என்பது தெளிவாகிறது. இவர்கள்தான் மக்கள் ஜனநானயகத்தைப் பற்றி அதை அளக்கிறார்கள் இவர் வாழ்ந்த சூழல் வியாபார ரீதியிலேயே அரசியலையும் நோக்க வைக்கின்றது. தனியார் வர்த்தக ஸ்தாபனம் போலவே தனது கட்சியை காண விளைவது பிரபாகரனின் தவறல்ல. அதற்கப்பால் சிந்திக்க முடியாத பலவீனம் அவருடையது. ஆகவே தான் கட்சியில் பணிபுரிவோரை "தான் நியமித்ததாக" கூறுகின்றார். அவரின் கட்சி வர்த்தக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஸ்தாபனம் போன்றது. அங்கு அரசியல் நோக்கில் இருக்கவேண்டிய ஜனநாயகம் இல்லை. தான்
விற்கும் பண்டங்களை—விரும்புவர்களைப் போலவே மக்களை இவரால் நோக்க முடிகின்றது.
சரியான அரசியல் விழிப்புப்பெற்றதும் இளைஞர்கள் பிரபாகரனை விட்டு பிரிவது யதார்த்த
பூர்வமானதொன்றே, ஆகவே இங்கு உமாமகேஸ்வரன் என்ற ஒரே ஒரு தனிநபர் மட்டும்
வெளியேறவில்லை. (பிரபாகரின் வார்த்தையில் விலக்கப்படவில்லை.) உமாமகேஸ்வரன்
தலைவராக இருந்ததையும் பிரபாகரன் ஏற்றுக்கொள்வது கவனிக்கத்தக்கது. உமாமகேஸ்
வரனுடன். ஒரு (கூட்டமே வெளியேறி விட்டதென்பதையே மக்கள் சிந்திக்கின்றார்கள்.)
இக் கூட்டமானது ஈழ விடுதலைக்கு ஏற்றதொரு பாதையினை வகுப்பதற்கு சகல
உரிமையையும் கொண்டதல்லவா அது மட்டுமல்ல ஈழ விடுதலை இயக்கத்தின் அண்மைக்கால
வரலாறு இளைஞர்கள் கொள்கை அடிப்படையில் பிரிவதையும் பிரிந்தோர் புதிய நோக்கில்
இணங்கி, ஒருங்குபட்டு உழைப்பதையும், காட்டுகின்றதல்லவா. மக்கள் மத்தியிலும், கட்சி
உறுப்பினர்கள் மத்தியிலும் காணப்படும். முரண்பாடுகள் தீர்க்கப்படும் வழிமுறைகளில் ஒன்று
"பிளவும் அதனடியான புதிய இணைப்புகளும்" ஆகும். முரண்பாடுகள் தீர்க்கப்படும் போது
யாவும் வளர்ச்சி அடைகின்றன: விருத்தி பெறுகின்றன. 1970ம் ஆண்டின் மாணவர் பேரவை
முதல் இன்று வளர்ந்துள்ள இயக்கங்கள் வரையான நிகழ்வுமுறை உண்மையில் தமிழ் ஈழ
விடுதலையின் வளர்ச்சியையே காட்டுகின்றது. இதனைப்புரிந்து கொள்ள மறுப்பதே விடுதலைப்
புலிகள் குழவினதும் அதன் தலைவரான பிரபாகரனதும் மிகப் பெரிய நோயாகின்றது. ஆகவே
பிளவுகள் தவிர்க்கமுடியாதது. பிளவுள்ள கட்சிகள் புதிய கட்சியை தட்டி எழுப்பி வளர்த்து
வழிகாட்டும் போக்கில் அதுசரியான பாதையில் சென்றதென்பதை மக்களே விமர்சிக்க
வேண்டியது. எதிர்கால வரலாறே தீர்க்கமான பதிலை அளிக்கவேண்டியது.

ஒரே நோக்கினை அடைவதற்காகப் பாடுபடுவதாகக் கூறும் கட்சிகள் யாவும் ஒருங்கிணைந்து
செயற்படுவதை தாங்கள் எதிர்க்கின்றீர்களா? நிருபரின் அடுத்த கேள்வி இது.

"மிகப் பரிதாபம் என்னவெனில் ஐக்கியப்படவேண்டும் எனும் எண்ணம் இக்கட்சிகளுக்கு
மனப்பூர்வமாக இல்லை; இக்கட்சிகள் முதலில் தமக்குள்ளே ஐக்கியத்தை ஏற்படுத்தி தமது
அந்தரங்க சுத்தியை நிருபித்து விட்டு எம்முடன் கலப்பதற்கு வருவதே சிறந்தமுறை என
நான் கருதுகிறேன்"—இது பிரபாகரனின் பதில்.

மேலோட்டமாக நோக்கும் போது, இதில் பெரும் பாதகம் இருப்பதாக தெரிவதில்லை.
ஆனால் அது மாபெரும் குள்ள நரித் தந்திரம், ஐக்கியத்திற்காக 10 கட்சிகள் கூடிப் பேசும்போது
ஒவ்வொரு கட்சியின் பலமும் பத்தில் ஒன்றாகவே அதாவது 10 சதவிகிதமாகவே இருப்பது
கண்கூடு. ஜனநாயக ரீதியில் இணங்கித் தீர்வுகாணும் போது எந்தவொரு கட்சியும் பெரும்.
ஆதிக்கம் செலுத்திவிட முடியாது. ஆனால் ஏனைய 9 கட்சிகளும் முதலில் இணைந்து ஒரு
கூட்டாக அமைந்த பின்புதன்னுடன் கலக்க வரும்போது தந்திரோபாயரீதியில் தனது கட்சியே
ஆதிக்கம் செலுத்த முடியும், நிபந்தனைகளை முன்வைக்கமுடியும், இவற்றின் அடியாக ஏனைய
ஒன்பது கட்சிக் கூட்டணிக்குள் பிளவையும் மறுபடி ஏற்படுத்தி அவர்களுக்கு ஒரு தோல்வி
மனப்பான்மையையும் உருவாக்கி விரக்தி அடையச் செய்வதே பிரபாகரனின் சாணக்கிய
தந்திரம். சுயசிந்தனை உள்ள எவருமே இதனைப் புரிந்து கொள்வர். பொது மக்களை மடையர்
என்று எண்ணும் நிலையிலே இவ்வாறு தான் தோன்றித்தனமான குதர்க்க வாதங்களை
முன்வைத்து தனது உண்மை சொருபத்தையும் எமக்கு இனங்காட்டி விடுகின்றனர் பிரபாகரன்
குழுவினர். அதாவது. பத்துப்பேர் கூடும்போது தனது கூற்றுக்கள் சிறுபான்மை அந்தஸ்தை
பெற்றுவிடக் கூடாது என்பதற்கும் அதனைப் பெரும்பான்மை அந்தஸ்து பெறவைப்பதற்கு
மாகவே முதலில் ஏனையோரை ஒன்றுபடக் கூறுகின்றாரே அன்றி உண்மையான ஐக்கிய முன்னணி
ஒன்றைக்கட்டி எழுப்புவதற்காக அல்ல.

அடுத்த கேள்வி மிகவும் சுவையானதும் ஆழமானதும், "கடுகு சிறிதாயினும்" என்பதைப்
போல் கேள்வியும் மிகச் சிறியதே.

இப்போராட்டத்தில் தாங்கள் தனிப்பட்டிருக்கின்றீர்களா? என்பதே இக் கேள்வி.
கேள்வியைக் கேட்பவர் அரசியல் உலகில் மூழ்கித், திளைத்த பத்திரிகை நிருபர். அரசியலுலகில்
"விஷயமறிந்த வட்டாரங்கள் மூலம்" அறிந்த விசயத்தினை பின்னணியிலேயே அவர் கேள்விகளைத்
தொடுக்கிறார். ஏதோ, எதேட்சையாக அவர் கேள்விகள் கேட்பதில்லை தனித்து நிற்கிறீர்களா?
என அவர் கேட்பதே விசயமறிந்த வட்டாரங்களில் பிரபாகரன் தனிமைப்பட்டு நிற்பதை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உணர்த்துகின்றது. இதனை மறுத்தே பிரபாகரன் பதிலிறுப்பார் என்பது தெரிந்ததே. அவர் கூறுகிறார் "நான் தனியாக நிற்கவில்லை மிகச் சக்திவாய்ந்த தேசிய இயக்கமொன்றுக்கு நான் தலைமை தாங்குகின்றேன். பரந்துபட்ட தமிழ் மக்கள் என்னை ஆதரிக்கின்றனர்." இது உண்மையெனில் கேள்வியைக் கேட்டு நிருபர் தனக்கு அசட்டுப்பட்டம் சூட்டிக்கொள்ள விரும்புவாரா? இந்த விஷயத்தில் இவர் மக்கள் தன்னோடு நிற்கிறார்கள் என்பதற்கு என்ன ஆதாரங்களை கூறுகிறார்.

1. அவர் மக்கள் அமைப்பை எங்கும் கட்டவில்லை.
2. ஏனைய ஸ்தாபனங்கள் இவரை அங்கீகரிக்கவில்லை.
3. இவரும் ஏனைய ஸ்தாபனங்களை அங்கிகரிப்பதில்லை.
4. இவர் இராணுவ நடவடிக்கைகளை மாத்திரம் செய்கிறார். அதுவும் யாழ் குடா நாட்டில் மாத்திரம் செய்கிறார்.

இவர் எவ்வளவு சொன்னாலும், அவர் இன்று தனித்து நிற்கிறார். தனது பொறுப்பற்ற செயல் முறைகளால் நானாந்தம் மக்களால் நிராகரிக்கப்படுகின்றார். என்பதை நிருபர் இங்கு நாசுக்காகக் காட்டுகின்றார்.

பிரபாகரன் கடைப்பிடிக்கும் அரசியற் சித்தாந்தம் எது என்பது இன்னொரு கேள்வி இதற்கு இரண்டேயிரண்டு வார்த்தைகளில் பதில் கூறி முடித்துவிடுகிறார் தலைவர்.

புரட்சிகர சோஷலிசம் (Revolutionary Socialism) என்பதே அந்த இரண்டு சொற்கள்! உள்ளத்திலிருந்து வரும் பதில்களிலேயே அந்தரங்க நோக்கத்தினையும், கூர்மையையும், உணர்ச்சியையும் நாம் காணமுடியும். வெறும் இரண்டு வார்த்தைகள். இதற்குமேல் கூறுவதற்கு அவர் உள்ளத்தில் ஒன்றுமேயில்லை. சோஷலிசமே கோட்பாடு அதை வென்றெடுப்பதற்கே ஆயுதம் தாங்கிய புரட்சி இதுவே உண்மை: இதைவிடுத்து புரட்சிகர சோஷலிசம் என்பது ஒரு கோட்பாடெனில் அதனை சில வார்த்தைகளிலாயினும் விளக்கியிருக்கலாமே. அவரின் ஞான சூனியத்தையே இப்பதில் மேலும் காட்டுகிறது.

நிருபருக்கு இப்போது நன்றாகச் சூடு பிடித்துவிட்டது. பிரபாகரின் சூனியத்தன்மை தெளிவாகப் புரிந்துவிட்டார். நிருபர் அத்துடன் விடுவாரா! அடுத்த கேள்வியில் பிரபாகரனை மேலும் பொறி வைத்துப் பிடிக்கிறார், நிருபர்.

ஈழத்தை பெற்ற பின்பு எத்தகையதொரு தேசமாக இருத்தல் வேண்டும். எனத் தாங்கள் கருதுகிறீர்கள் - இது கேள்வி.

புரட்சிகர சோஷலிசமே தனது கோட்பாடு என இரத்தினச் சுருக்கமாகக் கூறிய தலைவர் இங்கு இயம்புகிறார். "தமிழினமானது ஒரு சோஷலிச தேசமாக அமையும்." அத்துடன் அவர் நிறுத்தி தனது ஞான சூனியத்தை மறைந்திருக்கலாம். ஆனால் சோஷலிசம் என்று சொன்ன அதே மூச்சுடன் தமிழ் முதலாளித்துவ சக்திகளை சாந்தப்படுத்துவதற்காக தான் கருதும் சோஷலிச நாடு என்னும் போது ஒரு "எகலிரேறியன் சமுதாயம்" என்று மழுப்புகிறார் தலைவர்.

'எகலிரேனியன்' என்பது சம உரிமை, சம சந்தர்ப்பம் சம உதவிகள் வழங்கும் ஒரு அரசு எனப்படும். அதாவது இது, பொருளாதார ரீதியில் ஒரு சோஷலிச அமைப்பைக் கட்டி எழுப்புவதை குறிப்பதல்ல. முதலாளித்துவ அமைப்பில் ஒரு சில சீர்திருத்தங்களைச் செய்து சோஷலிச சமுதாயம் என்று மக்கள் கண்ணில் மண்ணைத் தூவும் ஒரு திட்டமே, இவ்வாறு கூறி தனது உண்மை சொருபத்தையே மக்களுக்குக் காட்டிவிடுகிறார் நண்பர் பிரபாகரன் அவர்கள்.

பிரபாகரனின் குழுவில் முரண்பாடுகள் வெடிக்கத் தொடங்கிவிட்டன. தலைவர்கள் தத்தம் போக்கிலேயே பேசத் தொடங்கிவிட்டனர் என்பதற்கு பிரபாகரனின் அரசியற் குருதேவராக விளங்கும் பாலசிங்கம் அவர்கள் இந்தியா டுடே (India Today) எனும் சஞ்சிகையில் கொடுத்த பேட்டிக்கும் பிரபாகரன் 'சன்டேயில்' கொடுத்த பேட்டிக்குமிடையேயான முரண்பாடுகளை இனி நோக்குவோம்.

அந்நிய ராணுவத் தலையீடு பற்றி நிருபர் கேட்டதற்கு "நாமே போராடி விடுதலையைப் பெறவேண்டும். இதற்கு இந்தியாவின் ஆதரவும் அனுதாபமும் தேவை" என்கிறார் பிரபாகரன். மறுபுறத்தில் குருத்தவர் பாலசிங்கம் 'இந்திய டுடே'யில் தமிழ் ஈழத்தின் குரல் ஒலிபரப்பு நிலையம் இந்திய மண்ணிலேயே நிறுவப்பட்டுள்ளது என ஆதாரம் ஒன்றும் இல்லாமல் மிகப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பொறுப்பற்ற ரீதியில் இந்தியாவை குற்றம் சாட்டி உள்ளார். யானை தனது தலையிலேயே மண்ணை அள்ளிப் போடுவதுபோல் விடுதலைப் புலிகளின் குருதேவர் கூறி இந்தியாவின் வெறுப்பையும் அலட்சியத்தையுமே சம்பாதிக்கின்றார்.

இன்னுமொரு முரண்பாடு: - எந்த உலக நாடுகள் இயக்கங்கள் உங்களுக்கு மிக ஆதரவு காட்டுகின்றன, உதவ முன்வருகின்றன என 'சன்டே' நிருபர் கேட்டதற்கு பிரபாகரன் அவர்கள் மிகச் சாதுரியமாக இதுபற்றி நான் ஒன்றும் கூறவிரும்பவில்லை என்கிறார்.

மறுபுறத்தில் புலிகளின் ஞான குருவான பாலசிங்கம் பி. எல். ஓ (P. L. O) சம்பாப்வே ஆபிரிக்க தேசிய யூனியன் (ZANU) சம்பாப்வே மக்கள் யூனியன் (ZAPU) எனும் இயக்கங்களுடன் தமக்கு நெருங்கிய உறவும் தொடர்பும் உண்டு என வெட்ட வெளிச்சமாக பறை தட்டுகிறார். போராளிகளுக்கு உதவும் இயக்கங்களையும் நாடுகளையும் காட்டிக் கொடுத்து பறை தட்டுவதா போர்த்தந்திரம். உண்மையாகவே இவர்களுக்கு தொடர்பு இருந்தால் இவ்வாறு வாய்க்கு வந்தபடி உளறமாட்டார்கள். இதில் இன்னுமொரு வேடிக்கை என்னவென்றால் ZANUவும் ZAPUவும் கொள்கை ரீதியில் மாறுபட்ட கருத்துள்ள எதிரும் புதிருமான இயக்கங்கள். ஒன்றினது நண்பர் மற்றதற்கு எதிரி, என்பதே இவற்றின் அணுகுமுறை. பாலஸ்தீனத்துடனும் இஸ்ரேலுடனும் ஒரு வகையான) நட்புறவையும் உதவி பெறும் உரிமையையும் எவரும் வைத்திருக்க முடியுமா? முடியாதென்பது உலக அரசியலின் அரிச்சுவடி. படித்தவர்களே அறிந்த உண்மை. அமிர்தலிங்கத்துடன் கூட்டு வைத்துக்கொண்டு கூட்டணியை எதிர்ப்பது போல் ZANU, ZAEU என்பவற்றுடனும் நடந்துகொள்ளலாம் என பிரபாகரனின் ஞானகுரு எண்ணினாரா?

ஞானகுருவானவர் "பிரபாகரனைப் பேக்காட்டத்" தொடங்கி உள்ளதையே இந் தகவல் காட்டுகின்றது. பொய் சொன்னாலும் பொருந்தச் சொல் எனும் ஒரு முதுமொழி உண்டு. பிரபாகரரின் குரு கொஞ்சம் அவசரப்பட்டுவிட்டார் பொய் சொல்வதில். எனவே இனி பிரபாகரனின் குறி தனது ஞானகுருவின் மேல்தான் இருக்கும்.

ஆகவே பிரபாகரன் கட்சியின் குழப்ப நிலையின் உச்ச கட்டத்திலேயே தலைவர்கள், ஞான குருமார் முன்னுக்கு பின் முரணாக, தம்மிச்சைக்கு ஏற்றதான பேட்டிகளையே கொடுக்கின்றனர். தியாகம் சேவை என்பதற்கு பதிலாக பதவிஆசை தனிநபர் திறமை நிபுணத்துவம் என்பன தலைதூக்கும்போது இயக்கங்கள் இவ்வாறு சிதறி உடைவது தவிர்க்க முடியாதது. பொதுமக்களைப் பொறுத்தளவில் இது வரவேற்கத்தக்கதே.

இராணுவத் தந்திரோபாயத்தை பொறுத்தளவிலும் முரண்பாடுகளைக் காணலாம். உடைந்து சிதறிப் போகும் தறுவாயில் கட்சி ஆயுதமாக 'உக்கிரமான' பொய்ப்பிரசாரங்கள் செய்யப்படுவது வழக்கு. வெகுஜனங்களை ஆயுத பாணிகள் "ஆக்கி" குரில்லாப் போரினை வெகுஜன இயக்கமாக்கி வருவதாக பிரபாகரனின் விடுதலைப் புலிகள் தற்போது கொக்கரிக்கின்றனர். ஆனால் நடைமுறை எவ்வாறு இருக்கின்றது. 1983 ஜூலை 23ம் திகதி இராணுவத்தினைத் தாக்கி 13 இராணுவ வீரர்களைக் கொலை செய்தமையை வர்த்தித்து ஆகவேனும் குரில்லாத் தாக்குதல் என்றே ஏற்றுக்கொள்வோம். இதனை அடுத்து தொடர்ச்சியாக கெரில்லாத் தாக்குதல்கள் நடைபெற்றதா?

குரில்லாத் தாக்குதலின் நோக்கமே அரச இராணுவத்தின் பலத்தை படிப்படியாக சீர்குலைப்பதே. ஆனால் நடைமுறை என்ன. சென்ற ஆண்டு தாக்குதலின் பின் சிங்கள அரசின் இராணுவம் மேலும் பலமாக்கப்பட்டதா அல்லது பலம் இழந்துவிட்டதா? இக்கேள்விகளுக்கு நாம் பதில் கூறவேண்டியதில்லை மக்களே பதில் கூறுவார்கள். இயக்கத்தின் வழிமுறைகள் தமக்கு தீமையே எனில் மக்களே இயக்கத்தைத் தூக்கி எறிவார்கள். ஆகவே இன்று நடைபெறுவதும் கூட. இனியும் மக்கள் வெறும் பார்வையாளராக இருந்து சில இயக்கங்கள் செய்யும் பொறுப்பற்ற நடவடிக்கைகளுக்கும் பதிலாக மக்களே "வேண்டிக் கட்டும்" நிலையில் இருக்க தயாராகவில்லை என்பதை பிரபாகரன் உணர்ந்தால் போதுமானதே.

அதே வேலையில் சரியான கொள்கையையும் சரியான போராட்ட வழிகளையும் கடைப்பிடிக்க முன்வரும் இயக்கங்களுடன் தோளோடு தோள் கொடுத்து போராடுவதற்கு பொது மக்கள் என்றும் தயாராக உள்ளனர் என்பதையும் நாம் உணரவேண்டும்.

அர்ஜுனா

—வாசகர் வட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்